# உணவு வடிவத்தில் அன்பு

உணவு வடிவத்தில் அன்பு - அது
உறவின் உயிர் காக்கும் தெம்பு- புது
உலகை உருவாக்கும் நம்பு - புது
உலகை உருவாக்கும் நம்பு - ( 2 )

**1)**
சிதைந்த ஓருடலில் இணைந்த ஓருலகம்
பலியின் பேறுபலன் தானே - விதை
நிலத்தில் வீழ்ந்து பின்னர் முளைத்து
நூறு பலன் தருவதே இயற்கை தானே -( 2 )
இதய தியாகம் ஒருவேள்வி - அதில்
உதயமாகும் பொது நீதி - ( 2 )
சமநலம் தோன்றிடும்
விருந்தினைப் பகிர்வதாலே

( உணவு வடிவத்தில் அன்பு)

**2)**
அருகிலே இருந்து எதிலும் தோள் கொடுக்கும்
கருணைத் தேவன் வரும் வடிவோ - ஒரு
குடும்பமாக நம்மை வளரத் தூண்டி இடர்
தடைகள் தாண்டி வரும் விடிவோ - 2
உணவிலே இறைவன் ஏனோ - நம்
உறவிலே உறையத் தானோ - 2
பிறரிலே இறைவனைக்
காணும் நிலை மலரத் தானோ

( உணவு வடிவத்தில் அன்பு)